இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, “உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” என்று வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம், “இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்” என்றார். (யோவான்20:16-17)

# அனைத்து மலேசிய மேய்ப்புப்பணி மாநாடு (PMPC) 2026

## 16-19, செப்டம்பர் 2026, மஜோடி சென்டர், ஜோகூர்

**கோலாலம்பூர்**: 1976-ல் நடைபெற்ற ‘அர்ஜினாமெந்தோ’ எனும் தீபகற்ப மலேசிய திருஅவையின் மறுமலர்ச்சி பாசறையைத் தொடர்ந்தி ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மீள்பார்வை மற்றும் எதிர்நோக்கு அடிப்படையிலான மேய்ப்புப்பணி மாநாடுகள் நடைபெற்று வருவதை மறந்திருக்க இயலாது. 1986, 1996, 2006 மற்றும் 2016-ஆம் ஆண்டுகளில் இந்த மாநாடுகள் சிறப்பாக நடத்தப் பட்டன. இவ்வரிசையில் அடுத்தப் பத்தாண்டுக்கான மேய்ப்புபணி மாநாடு 2026-ஆம் ஆண்டு நடபெறவுள்ளது. இதன் தயாரிப்புக்கான விபரங்களை தீபகற்ப மலேசிய மேயப்புப்பணி ஏற்பாட்டுப் பணிகுழு வெளியிட்டுள்ளனர். அதன் விபரங்கள் பின்வருமாறு:

### தூரநோக்கு

மலேசிய திருஅவை அருள்பணியளர்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் என ஒன்றுகூடி கொண்டாடவும், செவிமெடுக்கவும் ஆண்டவரின் ஒளியில் நடக்கவும் திரண்டுவருதல் (எசா 2: 2-5) என்பது இதன் தூரநோக்காகும்.

### இறைவார்த்தை (எசா 2:2-5)

இறுதி நாள்களில் ஆண்டவரின் கோவில் ஆமைந்துள்ள மலை எல்லா மலைகளுக்குள்ளும் உயர்ந்ததாய் நிலை நிறுத்தப்படும்; எல்லாக் குன்றுகளுக்குள்ளும் மேலாய் உயர்த்தப்படும்; மக்களினங்கள் அதை நோக்கிச் சாரை சாரையாய் வருவார்கள். வேற்றினத்தார் பலர் அங்கு வந்து சேர்ந்து புறப்படுங்கள் ஆண்டவரின் மலைக்குச் செல்வோம்; யாக்கோபின் கடவுளின் கோவிலுக்குப் போவோம். அவர் தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார்; நாமும் அவர் நெறிகளில் நடப்போம்' என்பார்கள்.

ஏனெனில், சீயோனிலிருந்தே திருச்சட்டம் வெளிவரும்; எருசலேமிலிருந்தே ஆண்டவரின் திருவாக்கு புறப்படும். அவர் வேற்றினத்தாரிடையே உள்ள வழக்குகளைத் தீர்த்து வைப்பார்; பல இன மக்களுக்கும் தீர்ப்பளிப்பார்; அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள், ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது;

அவர்கள் இனி ஒருபோதும் போர்ப்பயிற்சி பெற மாட்டார்கள். யாக்கோபின் குடும்பத்தாரே, வாருங்கள் நாம் ஆண்டவரின் ஒளியில் நடப்போம்.

### தூதுரை

- மக்களின் குரலாக திருஅவை
- திருஅவை இரக்கத்தோடு நாடுகிறது.
- திருஅவை வாழ்வின் முழுமையைத் தெரியப்படுத்துகிறது
- திருஅவை தூய்மையில் வளர்ச்சி பெறுகிறது.

### தீ.ம.மே. மாநாடு 2026-ன் குறிக்கோள்கள்

- மலேசிய கத்தோலிக்கத் திருஅவையாக, கிறிஸ்துவுடனான ஒன்றிப்பில் நமது ஒற்றுமையை வெளிப்படுத்துதலும், அதன் பன்முகத்தனைமையையும் தனித்துவத்தையும் கொண்டாடுதல்.

- சவால்களையும் வாய்ப்புகளையும் ஏற்றுக் கொள்ளும் வேளையில், எதிர்நோக்கு, தூய்மை மற்றும் தூதுரைப்பணியில் திடம்பெறுதல்.

- .தூதுரைப் பணி சீடர்களாக ஒன்றிப்பில் நாம் உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் திகழ்தல்.

### நோக்குநிலையும் திசையும்




- நாம் ஒன்றுகூடி வந்து சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியாவின் அழகு, தனித்தன்மை மற்றும் பண்பாடுகள் ஆகியவற்றை கொண்டாடுகிறோம். **(கொண்டாட்டம்)**

- சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியாவின் அந்தந்த வட்டாரத்தின் மேய்ப்புப்பணி வளர்ச்சியின் தனித்தன்மையைப் பகரிந்து கொள்கிறோம். **(செவிமெடுத்தல்)**

- மலேசிய திருஅவையைப் பாதிக்கும் சவால்களில், குறிப்பாக குடும்பம், திருஅவை, சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, இவற்றுக்குப் பதில் அளிக்கும் வகையில் உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் செயல்படும் தூதுரைப் பணியை மேற்கொள்ளுதல். **(செயல்படுதல்)**

### தீபகற்ப மலேசியா மேயப்புப்பணி மாநாடு 2026-மத்திய செயற்குழு உறுப்பினர்கள்

- பேராயர் ஜூலியன் லியாவ் (கோலாலம்பூர்)
- பேராயர் ஜோன் வோங் (சபா/ கோத்தா கின்னபாலு)
- ஆயர் ஜோசப் ஹீ (சரவாக்/சிபு)
- அருள்தந்தை ஜூட் மிரண்டா (பினாங்கு)
- அருள்தந்தை தோமினிக் தான் (கோலாலம்பூர்)
- Msgr. பீட்டர் இங் (மலாக்கா-ஜோகூர்)
- அருள்தந்தை தோமஸ் மடனன் (கோத்தா கின்னபாலு)
- Msgr. கில்பர்ட் எங்கான் ( கெனிங்காவ்)
- அருள்தந்தை ஸ்தன்லி மாதாக்கிம் (சண்டக்கான்)
- அருள்தந்தை பெட்ரிக் ஹெங் (கூச்சிங்)
- அருள்தந்தை "ல்போன்சுஸ் தாங் (சிபு)
- அருள்தந்தை எண்டி லீ (மிரி)

### தீபகற்ப மலேசியா மேயப்புப்பணி மாநாடு 2026 நோக்கிய பயணம்.

2018 - மலேசிய அருள்பணியாளர் மாநாடு
2019 - சிறப்பு தூதுரைப்பணி மநாடு
2020 - 2024

- அந்தந்த பங்குகளில் பங்கு மேய்ப்புப்பணி பொதுக்கூட்டங்கள் நடத்தப்படுதல். *(புள்ளி விபரக் கணக்கெடுப்பு, கேள்வி-பதில் ஆய்வுத் தாள்கள், அடிமட்டத்திலான பிரச்சனைகள் கண்டறிதல்)*

- புள்ளி விபரக் கணக்கெடுப்பும் ஆய்வுத்தாள் பகிர்வும் பங்கு மற்றும் மாமறைமாவட்ட அளவிலும் மேற்கொள்ளப்படும். அனைத்து புள்ளி விபரங்களும் தகவல்களும் சேகரிக்கப்பட்டு அந்தந்த மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி மாநாட்டில் அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்படும். இந்த கூட்டு அறிக்கை பின்னர் சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசிய மேய்ப்புப்பணி மாநாட்டில் ஒருங்கிணைக்கப்படும்.

2022 - தீபகற்ப மலேசியா துறவரத்தாரின் மாநாடு

2023 - மாமறை மற்றும் மறைமாவட்டங் களின் மேய்ப்புப்பணி மாநாடு

2024 -சபா, சரவாக், தீபகற்ப மலேசியா மேய்ப்புப்பணி மாநாடுகள். குறிப்பாக குடும்பம், திருஅவை, சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளில் கவனம் செலுத்துதல். அனைத்து வட்டாரங்களிலும் ஒரே மாதிரியான வழிமுறை அல்லது ஆய்வுமுறையைப் பின்பற்றி, 2026-ல் நிகழவுள்ள மாநாட்டில் விவாதிக்க கருப்பொருள்கள் சேகரிக்கப்படும்.

2025- மலேசிய இளைஞர் மேய்ப்புப்பணி மாநாடு

2025-2026 'மலேசியா திருச்சிலுவை' பயணம்

**'மலேசியா சிலுவை'** என்பது 3 x 3 சிலுவைகள் இணைந்து ஒரு பெரிய சிலுவையாக உருவாகுதல் ( இது சபா, சரவாக், தீபகற்ப மலேசியா அடங்கிய மலேசிய திருஅவையில் நிலவும் வேறுபாடுகளின் மத்தியில் ஒற்றுமை என்பதன் அடையாளமாக விளங்கும்.

இந்த 'மலேசியா சிலுவை' 2025-ல், ஜனவரி மாதத்தில் அதன் வெள்ளோட்டம் மறைமாவட்டங்களின் பேராலயங்களி லிருந்துத் தொடங்கும். பின்னர் பங்குகளுக்கும், சிற்றாலயங்களுக்கும், சமூக மையங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு 2026, செப்டம்பர் மாதம் இப்பயணம் நிறைவுப்பெறும்.

ஒவ்வொரு மாமறை மற்றும் மறைமாவட்டமும் மலேசியா சிலுவையை ஓராண்டு காலம் அதன் வசம் வைத்திருக்கும். ஒவ்வொரு பங்கும் மலேசிய சிலுவையைப் பெற்றுக்கொள்ளும் போதும், பின்னர் வழியனுப்பும் போதும் இறைவேண்டல் வழிபாடு இருத்தல் வேண்டும்.

செப்டம்பர் 2026-ல், மலேசிய சிலுவை ஒவ்வொரு மாமறை மற்றும் மறைமாவட்டத் திலிருந்து 2026 அ.ம.மே. மாநாட்டின் மையத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

2025- சபா, சரவாக், தீபகற்ப மலேசியா அடங்கிய அனைத்து மலேசிய மேய்ப்புப்பணி மாநாட்டுக்கான ஆய்வுத் தொகுப்புகள் திரட்டப்படு, 2026-ல் அ.ம.மே. மாநாட்டின் மையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

**2026- அனைத்து மலேசிய மேய்ப்புப் பணி மாநாடு நடைபெறும்.**

# இயேசு உயிர்த்ததும் சீடர்கள் ஏன் கலிலேயா சென்றனர்?

**மத் 28:10-ல், இயேசு அவர்களிடம் (பெண்களிடம்), "அஞ்சாதீர்கள்! என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" என்றார். ஏன் இயேசு திருத்தூதர்களைக் கலிலேயாவுக்குப் போகச் சொல்ல வேண்டும்?**

-பிரான்சிஸ் சேவியர்- பினாங்கு

மேற்கண்ட இந்தக் கேள்விக்கு நற்செய்திகளிலோ, இதர திருவிவிலிய நூல்களிலோ நேரடி பதிலைக் காண இயலாது. இதற்கு அன்று நிலவிய அரசியல், சமூகச் சூழலை அறிவது இன்றியமையாதது.

இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனா பகுதி மூன்று முக்கியப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. தெற்கே யூதேயா, வடக்கே சமாரியா, அதற்கு வடக்கே கலிலேயா. யூதேயா என்பது யூதர்களின் தாய் நாடு எனலாம். இங்குதான் சாலமோன் அரசர் கடவுளுக்கு என்று எழுப்பிய எருசலேம் ஆலயம் இருந்தது. யூதர்களில் சாதாரண மக்கள், பரிசேயர்கள், சதுசேயர்கள், தலைமைக்குருக்கள், மறைநூல் அறிஞர்கள் போன்ற பல்வேறு பிரிவினர் இங்கு இருந்தனர்.

இயேசுவின் போதனையும் நடவடிக்கைகளும் சாதாரண மக்களைத் தவிர்த்து மற்றனைவரையும் யூதேயாவில் பாதித்தது. எனவே, பொய் குற்றம் சாற்றி இயேசுவை உரோமையரின் ஆட்சியில் சிலுவையில் அறைந்து கொன்றனர். இதனால், ஐயமுற்ற அவரது சீடர்கள் ஓடி மறைந்தனர். இவர்களில், இவர் கொண்டிருந்த திருத்தூதர்களும் அடங்குவர். யோவான் சிலுவை அடியில் இருந்தார், பின்னர் அவரும் காணவில்லை. இது இயேசுவின் உயிர்ப்புக்கு முன் நிலவிய சூழல். மேலும், கல்லறையிலிருந்து அவரது உடலை அவரது சீடர்கள் திருடிச் சென்றுவிட்டனர் என்ற வதந்தியும் பரப்பப்பட்டது.

ஆகவே, நிச்சயமாக இயேசு உயிர்த்தப்பின் அவர் தம் சீடர்களை யூதேயாவில் ஒன்று திரட்டுவதும் சந்திப்பதும் இயலாது. இச்சூழலில் தான் அவர் இவர்களை கலிலேயாவுக்குச் செல்ல வேண்டும் என்று பெண்கள் வழி தூதுவிடுகிறார்.

ஏன் கலிலேயாவுக்கு?

கலிலேயா மேலே கூறியதைப்போல், யூதர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதி அல்ல. கி.மு 722-ல் இப்பகுதியைக் கைப்பற்றிய அசீரியர்களின் ஆட்சிக்குப் பிறகு, இங்கே ஒரு கலவையிலான மக்கள் இனம் தோன்றியது. இதனால், பல்வேறு இனத்தவர் வாழ முற்பட்டனர். குறிப்பாக, கலிலேயாக் கடலோரப் பகுதிகளில் வணிகம் பெருகி இருந்தது. இதனால், புறவினத்தாரும் இங்கே அதிகம் வாழ்ந்தனர்.

இயேசு ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் இப்பகுதியில் தான் சுற்றித்திரிந்து போதனை செய்தார். நோயாளிகளையும் பேய்ப்பிடித்தவர்களையும் குணமாக்கினார். 4000, 5000 பேர்களுக்கு உணவளித்த வல்ல செயல்கள் எல்லாம் இப்பகுதியில் நடைபெற்றன. இப்பகுதி வாழ் மக்களுக்கு இயேசு புதியவர் அல்ல. இவர் இவர்களுக்கு எதிரியும் அல்ல. அடுத்து இந்த கலிலேயா கடலோரப் பகுதியில் தான் பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு போன்ற சீடர்கள் தொழில் செய்து வந்தனர். மத்தேயு கூட இங்கேதான் சுங்க சாவடியில் வரி வசூலித்து வந்தார். எனவே, இவர்கள் இங்குள்ள மக்களை அறிந்தவர்கள். குறிப்பாக கப்பர்நகூம் இங்கேதான் உள்ளது. இது இயேசுவின் நடவடிக்கைகளுக்கு மையமாக இருந்தது.

ஆகவே, தம் சீடர்களின் உயிருக்கு ஆபத்து இல்லாதப் பகுதியாகவும் இப்பகுதி விளங்கியது. எனவே, இயேசுவின் உயிர்ப்புச் செய்தி காட்டுத் தீயைப்போல பரவுவதற்கு இங்கே தடையில்லை. எருசலேம் அமைந்திருந்த யூதேயா இதற்கு மாறுபட்டதாகும்.

இதனால், இயேசு விவேகமாகச் செயல்பட விரும்பினார். ஒரு கல்லில் இரு மாங்காய் போன்று, சீடர்களையும் சிரமமின்றி, பாதுகாப்பான சூழலில் சந்திக்கலாம். மற்றொன்று, அவரது உயிர்ப்புச் செய்தியை நம்பி ஏற்பதற்கு இங்கே புறவினத்தார் உட்பட மக்கள் கூட்டம் இருந்தது. இந்த சூழலில்தான் இயேசு தம் சீடர்களை கலிலேயாவுக்குப் போக தூதுரைக்குமாறு அப்பெண்களைப் பணித்தார் என்று நம்பலாம்.

- ஆர்.கே.

# பெருந்தொற்று சூழலில் நம்பிக்கையொளி அணையாதிருக்கட்டும்

**வத்திக்கான்:** கொரோனா பெருந்தொற்று உருவாக்கியுள்ள இருள்நிறைந்த இந்த காலக்கட்டத்தில், நம்பிக்கையை இழக்க வேண்டாம் என, உயிர்த்த ஆண்டவர் நம்மிடம் கூறுகிறார் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏப்ரல் 06, கடந்த செவ்வாயன்று கூறியுள்ளார்.

அடக்குமுறைகள், ஹாங்காக்கில் இடம் பெறும் கைதுகள், பொருளாதார நெருக்கடிகள்... இவ்வாறு இக்காலக்கட்டத்தில் நிலவும் சமுதாயப் பெருந் தொற்றுக்களைக் கோடிட்டு காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவின் உயிர்ப்பு தருகின்ற நம்பிக்கை பற்றிக் கூறியுள்ளார் என அச்செய்தி



உயிர்ப்புப் பெருவிழா, பெருந்தொற்று ஆகிய இரு செய்திகளை தமது டிவிட்டரில் வெளியிட்டுள்ள திருத்தந்தை, “பெருந்தொற்றின் இந்த இருளான மாதங்களில், வாழ்வை மீண்டும் தொடங்கவும், ஒருபோதும் நம்பிக்கையை இழக்கமாலிருக்கவும் உயிர்த்த ஆண்டவர் நமக்கு விடுக்கும் அழைப்புக்குச் செவிமடுப்போம்” என்ற சொற்களைப் பதிவுசெய்துள்ளார்.

நம்பிக்கைதரும் இயேசுவின் உயிர்ப்பு மேலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உயிர்ப்புப் பெருவிழாவன்று வழங்கிய செய்தி, நம்பிக்கையைத் தேடிக்கொண்டிருக்கும் ஓர் உலகிற்கு, ஆறுதலாக இருந்தது என்று, ஆசியச் செய்தி கூறுகின்றது.

மியான்மாரில் இளையோர் கொல்லப் பட்டிருப்பது, ஹாங்காக்கில் இடம்பெறும் உரைக்கின்றது.

இயேசுவின் உயிர்ப்பு, தெளிவற்ற ஓர் அடையாளமோ அல்லது, உளவியல் முறைப்படி ஆறுதல் தருவதோ அல்லது, ஒரு கடந்தகால நிகழ்வோ அல்ல, மாறாக, மிகவும் நம்பிக்கையிழந்த சூழல்களிலும் கூட, கடவுள் நம் நம்பிக்கையாக இருக்கிறார், நம் வாழ்வின் வேதனைகளை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருப்பவர் அல்ல அவர் என்று, திருத்தந்தை கூறியிருப்பது ஆறுதலாக உள்ளது என, ஆசியச் செய்தி கூறுகின்றது.

இதற்கிடையே, மியான்மாரில் இடம்பெறும் இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அமெரிக்க ஐக்கிய நாடு உள்ளிட்ட சில நாடுகள், மியான்மாருக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்க திட்டமிட்டு வருகின்றன என செய்திகள் கூறுகின்றன. (AsiaNews)

இன்று பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறுவில் நாம் இணைகிறோம். இன்றைய ஞாயிறினை இரக்கத்தின் ஞாயிறு என்று திருஅவை அறிவித்துள்ளது. யூதர்களுக்குப் பயந்து சீடர்கள் அவர்கள் இருந்த அறையின் கதவை பூட்டிக் கொண்டனர்.

ஒருவர் உள்ளத்தில் பயம் இருந்தால் இருள் கவ்விக்கொள்ளும். அது நிம்மதியைக் குலைக்கும் அல்லவா? இந்நிலையில்தான் திருத்தூதர்கள் ஒடுங்கிப்போயிருந்தனர். ஆனாலும், தூய ஆவியாரின் ஆற்றலால் அவர்கள் ஒரே மனமும், உள்ளமும் கொண்டவராய் இருந்தனர். உயிர்த்த இயேசுவைச் சந்தித்தப்பின் தங்களுக்கு இருந்த தெல்லாம் பொது உடமையாக்கினர் என்றும், அவர்களுடைய வாழ்வில் அச்சம் ஒருபுறம் இருந்தாலும், அவர்கள் இறையனுபவத்தை உணர்ந்தனர் என்று முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. பயந்து கோழையுள்ளத்தினராய் இருந்தவர்கள் வலிமையுற்றோராய் மாறினர்.

இரண்டாம் வாசகத்திலோ, இயேசுவின் வார்த்தைகளை இதயத்தில் ஏற்று கடைப்பிடித்து வாழ்ந்தால் கடவுளின் அன்பு நம்மில் முழுமை எய்தும் என்றும், இயேசு தான் மெசியா என்பதில் நம்பிக்கை கொண்டால், கடவுளின் பிள்ளைகளாக, நாம் அன்பு வாழ்க்கை வாழ முடியும் என்றும் நம்பிக்கை மற்றும் அன்பு கலந்த ஒற்றுமை உறவில் வாழ்வதன் அவசியம் குறித்தும் புனித யோவான் எடுத்துரைக்கிறார்.

நற்செய்தியில் திருஅவைக்கான இறைவனின் ஒரு சிறப்பு கொடை அருளப் பட்டதை அறிகிறோம். இயேசு, சீடர்களை நோக்கி, "மண்ணுலகில் நீங்கள் எவருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படா" என்றார். ஒப்புரவு என்ற அருளடையாளம் இங்கே பிறக்கின்றது. மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிடமகனுக்கு அதிகாரம் உண்டு என்ற இறைமகன், தனக்குரிய அந்த அதிகாரத்தைத் தன்னைப் பின்பற்றிய தம் சீடர்களுக்குக் கொடுக்கிறார்; என்றால், அவர் தம் வாழ்வில் சீடர்களுக்கு எவ்வளவு உன்னத இடத்தை, மதிப்பைக் கொடுத்திருக்கிறார் என்பதை நாம் நன்கு உணர வேண்டும்.

உயிர்த்த இயேசுவைக் கண்டதும், ஏனையச் சீடர்களுக்கும் கலக்கம், குழப்பம், சந்தேகம் எழுந்தன என்பதை நற்செய்திகள் கூறுகின்றன (மத்தேயு 28:17; மாற்கு 16:13-14; லூக்கா 24:37-39). இயேசுவிடம் கேட்க முடியாமல், மற்ற சீடர்கள் மனதுக்குள் புதைத்து வைத்திருந்த சந்தேகத்தைத்தான் தோமா வாய்விட்டுச் சொன்னார். எனவே தோமாவை மட்டும் சந்தேகப் பேர்வழி என்று கண்டனம் செய்யாமல், எல்லாச் சீடர்களுமே சந்தேகத்தில், பயத்தில் வாழ்ந்து வந்தனர் என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

இறைவனின் மன்னிப்புக்கான கொடை அவரது இரக்கத்தை நமக்கு வெளிப் படுத்துகிறது. இன்று திருஅவை இரக்கத்தின் ஞாயிறை கொண்டாடுகிறது. இறைவன் இரக்கமுள்ளவர். அதே இரக்கத்தை நாமும் பிறரில் வெளிப்படுத்த வேண்டும் என்று இயேசுவும் எதிர்ப் பார்க்கிறார். “உங்கள் தந்தை இரக்க முள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்” (லூக் 6:36) என்கிறார். இயேசுவை, 'கடவுள்' என்று அறிக்கையிட்ட முதல் மனிதன் தோமாதான். இவ்விதம் ஆழமாய்த் தொட்டு, தன்னை மீட்புக்கு அழைத்துச் சென்ற இயேசு கிறிஸ்துவை, உலகெங்கும், குறிப்பாக, இந்தியாவில் அறிமுகம் செய்தவர், திருத்தூதர், தோமா. இறைவனின் இரக்கம், சந்தேகப் புயல்களை அடக்கும்; சந்தேக மலைகளைத் தகர்க்கும்; சந்தேகக் கல்லறைகளைத் திறக்கும். உயிர்த்த இறைவனைத் தொட்டுணர அழைக்கும்.

இந்த இறை இரக்கத்தை நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் உணர, 'சந்தேகத் தோமா' என்றழைக்கப்படும் புனித தோமையாரின் துணையோடு வேண்டுவோம். இறைஇரக்கம் நம்மில் ஊற்றெடுக்கவும், பிறருக்கும் வாழ்வளிக்கவும் நாம் இறைவனின் கருவிகளாகத் திகழ்வோம்.

அத்தோடு, திருத்தூதர்கள் அனைவரும் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என மிகுந்த வல்லமையோடு சான்று பகர்ந்து வந்தனர்.இது நமது வாழ்வாகவும் மாற வேண்டும்.

*-M. செல்வராஜூ, மலாக்கா,*

**பாஸ்கா காலம் 2-ஆம் ஞாயிறு**
திப: 4: 32-35
திபா: 118: 2-4. 16ab-18. 22-24
1 யோவா:5:1-6
யோவான்: 20: 19-31
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 2**